# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

### உயர் ஸ்தானிகருடன் புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்

இந்திய உயர் ஸ்தானிகரைச் சந்தித்த, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) தலைவர் திரு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, TELO உறுப்பினர் திரு ஜி கருணாகரன் எம்.பி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOTE) தலைவர் திரு த.சித்தார்த்தன் எம்.பி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் (EPRLF) திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன், TELO ஊடகப்பேச்சாளர் திரு ஜி சுரேந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் (DCP) தலைவர் திரு.வேந்தன் உள்ளிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் புத்தாண்டு வாழ்த்துகளைப் பகிர்ந்துகொண்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

02. இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாகவும் அவ்விடயம் சார்ந்த செயற்பாடுகளின் நிலைவரம் குறித்தும் இப்பிரதிநிதிகள் உயர் ஸ்தானிகருக்கு விளக்கமளித்திருந்தனர்.

03. இச்சந்திப்பின்போது உயர் ஸ்தானிகரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை முற்கூட்டியே நடத்துவதற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்திக்கூறினார்.

***

**கொழும்பு**
**28 ஏப்ரல் 2023**